**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D., FSKV,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 7-6-2019
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## காற்று மாசுபட்டை முறியடிப்போம் - தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் உலக சுற்றுசூழல் தின கொண்டாட்டம்

ஒவ்வொரு வருடம் ஜூன் **5** ஆம் நாள் உலக சுற்றுசூழல் தினமாக கடைபிடிக்கப்படுகிறது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக சுற்றுசூழலியல் துறை இந்த வருடத்தின் கருபொருளான காற்று மாசுபாட்டை முறியடிப்போம் என்பதை முன்னிறுத்தி ஜூன் 6 மற்றும் 7 ஆம் நாட்களில் சுற்றுசூழல் தினத்தை கொண்டாடியது.

இந்த நிகழ்வின் ஒரு பகுதியாக பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் நீ.குமார் மறுசீரமைக்கப்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு மையத்தை திறந்து வைத்தார். இதன் மூலம் பல்கலைக்கழகத்திலுள்ள கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு மறுபயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படவுள்ளது. அதை தொடர்ந்து துணை வேந்தர் ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்கள் மரங்களை நட்டனர். அரசுசாரா நிறுவனமான நிழல் மையத்தின் முருகன் மற்றும் நிறுவனத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டு மரக்கன்றுகளை வழங்கினர்.

ஜூன் 7 அன்று சுற்றுசூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மற்றும் வேளாண் கல்லூரியின் முதன்மையர் கொடியசைத்து துவங்கி வைத்தனர். பயிர் வினையியல் துறையிலிருந்து பேரணி தொடங்கி திட்ட சாலை, மருதமலை சாலை வழியாக சென்று சுற்றுசூழலியல் துறை வரை முன்னூறு மாணவர்களும் ஐம்பது ஆசிரியர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

சுற்றுசூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பதாகைகள் தாங்கிய வண்ணம் முகக்கவசம் அணிந்தவாறு மாணவர்கள், காற்று மாசுபாட்டை முறியடிப்போம், என கோசமிட்டு சென்றனர். பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு ஐடிசி-வாவ் நிறுவனம் தொப்பிகள் கொடுத்துதவியது.

சுற்றுசூழலியல் துறை மற்றும் கோர்டிவா அக்ரிசயின்ஸ் நிறுவனம் சேர்ந்து பாதுகாப்பான பூச்சிகொல்லி பயன்பாடு குறித்து பயிற்சி வகுப்பை நடத்தியது. இயற்கைவள மேலாண்மையின் இயக்குனர் டாக்டர் அர.சாந்தி, பதிவாளர் எ. எஸ். கிருஷ்ணமூர்த்தி மற்றும் கோர்டிவா அக்ரிசயின்ஸ் நிறுவனத்தின் டாக்டர் எ. பரணி தீபன் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

110 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இறுதியாக சுற்றுசூழலியல் துறை தலைவர் டாக்டர் கி.வள்ளியப்பன் நன்றியுரை கூறி நிகழ்வை முடித்து வைத்தார்.

மக்கள் தொடர்பு அலுவலர்